ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1725/24 - 2011 සැප්තැම්බර් 30 වැනි සිකුරාදා - 2011.09.30
*1725/24 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் வலப்பனை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்புரைகளின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் சத்தியப்பிரமானம் அல்லது உறுதியுரை செய்து ஒப்பமிடாமை காரணமாக வலப்பனை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

சிசிர புஷ்பகுமார பதிரன என்னும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும், வலப்பனை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. அண்ணாடி பெருமாள் ராஜேந்திரம் என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும் ;

இப்போது வலப்பனை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. அண்ணாடி பெருமாள் ராஜேந்திரம் என்பவர், வலப்பனை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

சமன் ஸ்ரீ ரத்நாயக்க,
தெரிவத்தாட்சி அலுவலர்,
வலப்பனை பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
நுவரெலியா,
*2011, செத்தெம்பர் 21.*

*10- 352*

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் நிக்கவெரட்டிய பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

*நிக்கவெரட்டிய பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்புரைகளின் பிரகாரம் அதன் ஏழாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியினுள் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதியுரை செய்து ஒப்பமிடாமை காரணமாக வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;*

*அருண எம். பி. ஜயசிங்ஹ என்னும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும், நிக்கவெரட்டிய பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. ஈ. எம். ஜயதிலக என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும் ;*

*இப்போது நிக்கவெரட்டிய பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ரத்நாயக முதியன்சேலாகே ஆனந்த லொகுபண்டார ரத்நாயக ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. ஈ. எம். ஜயதிலக என்பவர், நிக்கவெரட்டிய பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*ஆர். எம். ஏ. எல். ரத்நாயக,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*நிக்கவெரட்டிய பிரதேச சபை.*

*தேர்தல்கள் அலுவலகம்,*
*குருநாகல்,*
*2011, செத்தெம்பர் 21.*

*10- 353*